

சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதிக் கழக மாணவர் அணி அமைப்பாளர் ஆர்.ராமு, துணை அமைப்பாளர்கள் பா.மணிகண்டன், ஏ.அருண்குமார், ர.சங்கர், கி.பி.சுபஸ்ரீ, கே.பாஸ்கர், கே.கார்த்திக், ச.ஜீவா, டி.வீரராகவன் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டதையடுத்து அனைவரும் மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி, மாவட்ட அமைப்பாளர் எஸ்.சரவணன் ஆகியோர் உள்ளனர்.



2026 சட்டமன்ற தேர்தல் முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில்தேர்தல் பணிமனை திறப்பு விழா பாரிவாக்கத்தில் ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் வேட்பாளர் ஆ.கிருஷ்ணசாமி தேர்தல் பணிமனையை திறந்து வைத்தார் உடன் தொகுதி பார்வையாளர் பிடிசி.செல்வராஜ், எம்.முத்துதமிழ்செல்வம், வி.குமார், ஒன்றியநகர செயலாளர்கள் ஜி.ஆர்.திருமலை, ஆர்.ஜெயசீலன், சே.பிரேம் ஆனந்த், தங்கம் முரளி, டி.முரளிகிருஷ்ணன், ஒன்றிய நிர்வாகிகள் டி.அண்ணாமலை, ஏ.ஜனார்த்தனன், கே.எஸ்.புகழேந்தி, ஏ.ஆர்.பாஸ்கர், ஆர்.பிரபாகரன், வி.பி.பிரகாஷ், க.பரிமேலழகன், கே.விக்னேஷ், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஏ.ஜி.ரவி, என்.சண்முகம், வி.தணிகாசலம், எம்.ராம்பாபு, கே.ஜி.ஆர்.எஸ்.ஸ்டாலின், ந.ச.பாலா, கேசவன், வெங்கடேசன், எம்.ராஜாராமன், திருலோகசுந்தர், ஏ.சுமதி அத்தியகிரி, பவானி, வழக்கறிஞர் ஜி.டி.அருண் குமார் மற்றும் திமுக நிர்வாகிகள் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

## சைதாப்பேட்டை தொகுதியில் பல கோடி மதிப்பிலான

# திட்டங்களை பட்டியலிட்ட தி.மு.க. வேட்பாளர் மா.சுப்பிரமணியன்!

## பொதுமக்கள் சிறப்பான வரவேற்பு!

சென்னை, ஏப். 4-

மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் இன்று (3-4-2026) காலை 7 மணிக்கே 142 அ வட்டத்தில் வீதி, வீதியாக நடந்தேச்சென்று பொதுமக்களிடம் தீவிரமாக வாக்குச் சேகரித்தார். முதலில் சுப்பிரமணிய சுவாமி கோயில் தெருவில் தொடங்கிய வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சி, ஒத்தவாடை தெரு, கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெரு, வி.எஸ்.முதலி தெரு (வழியாக), சுப்பிரமணிய முதலி தெரு, குளக்கரை தெரு, காரணீஸ்வரர் கோயில் தெரு, பிராமின் தெரு வழியாக, சௌந்தரேஸ்வரர் கோயில் சுற்றியுள்ள தெருக்கள், அதன்பின்பு மாரி ஹோட்டல் வழியாக, வி.எஸ். முதலி தெரு, கிழக்கு சுப்பிரமணிய கோயில் தெரு, வி.வி.கோயில் தெரு திருமண மண்டபம் வழியாக, மேற்கு சுப்பிரமணிய கோயில் தெரு, செம்படதெரு, ஜெயராம்தெரு, பெருமாள் கோயில் தெரு, குளம் கோயில் சுற்று, இளையாழ்வார் கோயில் தெரு, ரங்கபாஷ்யம் தெரு, கவரைத் தெரு வழியாக திவான் பாஷ்யம் தெரு ஆகிய தெருக்களில் உள்ள அனைத்துத்தரப்பு மக்களையும் சந்தித்து, நண்பகல் 12.30 மணிவரையும் நடந்தேச்சென்று வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார்.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு மாலை 4 மணிக்கு வாணியர் தெரு வழியாக மேற்கு ஜோன்ஸ் சாலை, தாடிரெத்தினம் தெரு, கம்பர் தெரு சுற்று, திருவள்ளுவர் தெரு, கோடம்பாக்கம் சாலை வழியாக, சைதை சம்பந்தன் தெரு, முருகன் தெரு, சுப்பிரமணிய சாலை வழியாக, ஏழுமலை தெரு, காமக்கோடி தெரு, பாலகிருஷ்ணன் தெரு, ஆதிகேசவன் தெரு, குமாரசாமி தெரு, முனுசாமி தெரு, ராமசாமி தெரு, மேற்கு ஜோன்ஸ் சாலை, பவளவண்ணன் சுரங்கப்பாதை வழியாக சென்று கிருஷ்ணப்பிள்ளை கார்டன் 1, 2, 3, குயவர் வீதி, பாலாஜிசிங் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, சேஷாசலம் தெரு, பஜார் சாலை, தர்மராஜா கோயில் தெரு, ஜீயர் சந்து, ஜுனிஸ் சாலை, குருநாத் ஸ்டோர், பஜார் சாலை, பூக்கார தெரு, ஜெயராம் தெரு, ஜுனிஸ் சாலை, சைதாப்பேட்டை மார்க்கெட் பகுதியில் உள்ள சிறு, சிறு வியாபாரிகள், தொழிலாளர்களிடம் வாக்குச் சேகரித்தார். இறுதியில் குருநாத் ஸ்டோர் சாலை உள்ள வியாபாரிகளிடம் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது பொதுமக்கள் வேட்பாளருக்கு உற்சாக வரவேற்பளித்து, சால்வை அணிவித்தும், கைத்துண்டுகள் அணிவித்தும், பிறந்து நான்குமாதங்களே ஆன குழந்தையைக் கொடுத்து பெயர் சூட்டச் சொல்லியும், தங்களது அன்பை வெளிப்படுத்தி மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். இந்நிகழ்வில் செய்தியாளர்களிடம் தி.மு.க வேட்பாளர் மா.சுப்பிர மணி யன் தெரிவித்ததாவது:

சைதாப்பேட்டையில் தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.கழகத் தலைவரின் அறிவார்ந்த அறிவுரையுரையேற்று, சைதாப்பேட்டையை வளர்ச்சி மிக்க தொகுதியாக, படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் தொழில்நகரமாக மாற்றுவதற்கு சிறப்பான, சீர்மிகுந்த திட்டங்கள், செயல்படுத்தி வருவதாக பொதுமக்களிடம் வாக்குச் சேகரிப்பின் போது சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு. கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். அதன் விவரம் வருமாறு:-

சைதாப்பேட்டை 142வது வார்டில் 6 தளங்களுடன்கூடிய நூற்றாண்டு பழைமைமிக்க அரசு மருத்துவமனை ரூ.34.90 கோடி செலவுசெய்யப்பட்டு தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் நலம்பெறும் வகையில் கடந்த 20205 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8 ஆம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களில் உடல்நலம் பாதிக்கப்பட்டு, நோயைப் போக்கிக் கொள்ள அரசு மருத்துவமனைக்கு வரும் மருத்துவப் பயனாளர்களின் உதவியாளர்கள் ஒருவர் அல்லது இருவர், மருத்துவ சிகிச்சை முடியும் வரை, அவர்கள் தங்கிப் பார்த்துக்கொள்வதற்கு மிகவும் சிரமப்பட்டு வருவதை கருத்தில்கொண்டு, உதவியாளர்கள் பல நாட்கள் தங்கி சிறப்பான சிகிச்சை மேற்கொள்வதற்கு ஏதுவாக திராவிட மாடல் அரசின் சிறப்பான நடவடிக்கையின்கீழ் சைதாப்பே ட்டை அரசு மருத்துவமனையில் ரூ.1.15 கோடி செலவில் மருத்துவ பயனாளிகளின் உதவியாளர்களுக்கான காத்திருப்போர் கூடம் மிகச் சிறப்பாக திறந்து வைக்கப்பட்டு, ஏழை, எளிய மக்களின் நலம் காக்கும் அரசாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சி விளங்கிவருகிறது.

கடந்த 4 ஆண்டுகளில் சைதாப்பேட்டையில் 550 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நடத்தி நலத்திட்டங்களை ஒரு சகோதரனாக, சைதைத் தொகுதி தாய்மார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று ஏராளமானத் திட்டங்கள் மிகச் சிறப்பாக கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கட்டிட வேலை செய்பவர்கள் வேலை செய்துவிட்டு அந்த இடங்களில் படுத்து உறங்கும் அவலநிலையைப் போக்கி, 142வது வார்டில் கட்டுமானத் தொழிலாளர்கள் பயனடையும் வகையில் ரூ.40 லட்சம் செலவில், ஓய்வு அறை - உழைப்பாளர்கள் நலக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை, சைதாப்பேட்டையில் 21 தெருக்களில் வசிப்பவர்களுக்கு, சென்னை வரலாற்றில் முதல்முறையாக, 'கிராமநத்தம்' என்ற வகைப்பாட்டுடன் இருந்த வீடுகளுக்கு 216 'ரயத்துவாரி பட்டாக்கள்' வழங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 400 பெண்களுக்கு (18 திருநங்கைகள் உட்பட) ரூ.1 லட்சம் மானியம் மற்றும் ஓட்டுநர் உரிமம் உட்பட ஆட்டோக்கள் வழங்கப்பட்டுள்ளது.

துறைகள் வாரியாக திட்டங்களை அறிவித்து அத்திட்டங்களை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. சமூக நலத்துறையின் சார்பில் 75 பெண்களுக்கு ஆளுக்குத் தலா ரூ.1 லட்சம் மானியம் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் வழங்கப்பட்டன. வீட்டிலேய இருக்கும் பெண்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஒரு சிறுதொழில் செய்து தங்களது பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்வதற்கு சமூகநலத்துறையின்கீழ் 114 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

142வது வார்டில் ரூபாய் 2.40 லட்சம் செலவில், கொத்தவால் சாவடி தெருவில், தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதியில் மின்கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதே வார்டில் சைதாப்பேட்டை, பஜார் சாலையில் ரூ.72 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள சென்னை தொடக்கப்பள்ளி வகுப்பறை கட்டிடம் கூடுதலாகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. காரணீஸ்வரர் கோவில் தெருவில் உயர்கோபுர மின் விளக்குகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

சைதைத் தொகுதியில் உள்ள பெற்றோரில் இருவரையும் இழந்து நிராதரவாக இருந்த குழந்தைகளுக்கு திராவிட மாடல் அரசின் சிறப்பான திட்டங்களில் ஒன்றான "அன்புக்கரங்கள்" திட்டத்தின்கீழ் சைதாப்பேட்டையில் 45 மாணவர்களுக்கு 18 வயது வரை மாதந்தோறும் ரூ.2000 வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று தாயுமானவர் திட்டம், இருபால் மாணவர்களுக்கான தமிழ்புதல்வி, தமிழ்புதல்வன் கல்வி உதவித்தொகை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, பாதாளச் சாக்கடை, மழைநீர் வடிகால்வாய்கள், உடற்பயிற்சிக்கூடங்கள், நியாய விலைக்கடைகள், சமுதாய நலக்கூட திருமண மண்டபங்கள் போன்ற எண்ணற்றத் திட்டங்களால் அனைத்துத் தரப்பு மக்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிட மாடல் அரசினையும், மக்களின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களையும் போற்றிப் பாராட்டி, சைதாப்பேட்டை தொகுதி தி.மு.க.வின் கோட்டைதான் என்பதை மீண்டும் நிரூபிக்கும் தேர்தலாக, வரலாற்றில் இப்படியொரு வெற்றியை தி.மு.கழகம் பெற்றதில்லை என்பதை தமிழ்நாடு முழுவதும் மெய்பிக்கும்.

இவ்வாறு வேட்பாளர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்த வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, வட்டக் கழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம், சைதைத் தொகுதி பொறுப்பாளர் சைதை சாதிக், காங்கிரஸ் ஜோதி பொன்னம்பலம், வி.சி.க - ம.ஜேக்கப், பாண்டுரங்கன், ம.தி.மு.க. ப.சுப்பிரமணி, தே.மு.தி.க - ஆனந்தன், எஸ்.டி.பி.ஐ. - அபுதாகிர், சி.பி.ஐ - சிவா, ம.ம.க- சாகுல்அமீது, கதிர், ம.நீ.மை - கதிர், ஐ.யூ.எம்.எல். - அப்துல் கலாம் உள்ளிட்ட ஏராளமான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் பங்கேற்றனர்.




சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்தில் வட்ட கழக செயலாளர் எம்.எம். ஜெயரத்தினம் தலைமையில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் மதுரவாயல் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி 92, வது வட்ட தேர்தல் பணிமனை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் அ.ம.துரைவீரமணி. மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.வி.திலகர்.மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.நீலகண்டன்,கே.குமரேசன், மாவட்ட பிரதிநிதி எம்.சி.எழில்அரசு மற்றும் வட்டத்திற்கு உட்பட்ட அனைத்து நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தோழமை கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.எஸ்.மணி

**ஏப்ரல் 4 (1994)**



கழகம் தொடங்கிய நாளிலிருந்தே, உறுப்பினராகி தனது கிராமப்புறப் பகுதியில் கழகத்தை வளர்த்தவர்.

உத்திரமேரூர் ஊர்கிளைச் செயலாளர், வட்டச் செயலாளர், ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

பதினான்கு ஆண்டுகள் உத்திரமேரூர் பேரூராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## ஆவடியில் தீவிர வாக்கு சேகரிப்பு!

# ஒன்றிய அரசுக்கு எதிராக குரல் கொடுக்கின்ற அரசாக தி.மு.க. இருக்கிறது!

## கழக வேட்பாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் காட்டமான பேச்சு!



திருவள்ளூர் ஏப். 4-

ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பாக ஒன்றிய அரசு நிறுவனமான தின் உற்பத்தி தொழிற்சாலை, இன்ஜின் தொழிற்சாலை, படை உடை தொழிற்சாலை, விமானப் படை, மத்திய ரிசர்வ் காவல் படை, இந்தியாவின் தற்காப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், போர் வாகனங்கள் ஆராய்ச்சி மற்றும் மற்றும் மேம்பாட்டு நிறுவனம், பாதுகாப்புத் துறை ஆயுத கிடங்கு சுமார் 25,000 தொழிலாளர்களிடம், இந்தியன் இன்ஜின் தொழிற்சாலை நுழைவு வாயில் அருகே மற்றும் இந்திய விமானப்படை ஸ்டேஷன் அருகே இன்று காலை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாட்டு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு. நாசர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்

அப்போது ஒன்றிய அரசு பணியாற்றும் பணியாளர் கூறுவது..

மோடி ஆட்சியில் இருண்ட காலத்தை நோக்கி இந்திய தொழிலாளர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். போல் 29 சட்டங்களை தாறுமாறாக நிறைவேற்றி தொழிலாளர்களை நாட்டுக்குள்ளே நாடு கடத்திய மோடி அரசாங்கத்தை சிம்ம சொப்பனமாக விளங்குவதற்கு இந்த தேர்தலில் நீங்கள் உதயசூரியனை ஆதரிக்க வேண்டிய கட்டாயமாக இருக்கிறது.

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி வெற்றி பெற்றால் தான் இன்றைக்கு புதிய பென்ஷன் திட்டத்தை தட்டி கேட்டு இன்று கொண்டு வர முடியும். நியூ பென்ஷன் ஸ்கீம் என்று சொல்வதும் ஒன்று நோ பென்ஷன் ஸ்கீம் என்று சொல்வதும் ஒன்று. டென்ஷனை இல்லாமல் இருக்கிற சூழ்நிலைக்கு தான் என் பி எஸ் என்ற திட்டத்தை தட்டி கேட்க வேண்டும். 29 தொழிற்சங்க சட்டங்களை எதிர்த்து ஆர் எஸ் எஸ் உட்பட அனைத்து தொழிற்சங்கங்களும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. ஆவடியில் அமைச்சராக இருந்த சாமு நாசர் 45 ஆண்டுகால அரசியல் அனுபவம் உள்ளவர். அவருக்கு வாக்களித்து வெற்றி பெற செய்தால் என் பி எஸ் சிக்கு எதிராக போராடும் வல்லமை கிடைக்கும். இன்றைக்கு மாநில அரசாங்கம் சொல்வது மட்டுமல்ல அனைத்தையும் செய்திருக்கிறது.

இந்திய நாட்டில் 41 பாதுகாப்பு தொழிற்சாலைகளையும் இன்றைக்கு ஒட்டுமொத்தமாக கபளிகரம் செய்யும் வகையில் கார்ப்பரேஷன் ஆக மாற்றி அக்டோபர் மாதம் 2026 மிகப்பெரிய பேராபத்தை உண்டாக்கும் சூழ்நிலையை இன்றைக்கு மத்திய அரசு ஏற்படுத்தி இருக்கிறது. எதிர்த்து ஒரு போராட்டம். அடுத்ததாக நியூ பென்ஷன் ஸ்கீம் என்ற திட்டத்தை யுபிஎஸ் என்ற திட்டத்தையும் இன்றைக்கு அரங்கேற்று இருக்கிறது. தொழிலாளர்களை ஏமாற்றும் வேலை ஆகத்தான் இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரை என் பி எஸ் வேண்டாம் யூபிஎஸ் வேண்டாம் ஓபிஎஸ் என்று சொல்லக்கூடிய ஓல்ட் பென்ஷன் ஸ்கீம் திட்டம் தான் வேண்டும். அதைப்போல் தொழிலாளர் நலச் சட்டங்கள் ஆண்டாண்டு காலமாக உருவாக்கப்பட்டு அந்த சட்டங்களை சிதைக்கும் வகையில் 29 நல சட்டங்களை வெறும் நான்கு தொகுப்புகளாக மாற்றி அவர்கள் நினைத்தால் தொழிலாளர்களை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற பேராபத்தை விலைக்கும் அந்த சட்டத்தை நிறுத்தி மீண்டும் பழைய சட்டமே தொடர வேண்டும். தொழிலாளர்களின் எதிர்காலமே கேள்விக்குறியாக உள்ளது. இந்த கேள்விக்குறிகளை காப்பாற்றும் வகையில் இந்த அரசுக்கு நீங்கள் ஆதரவு தர வேண்டும். இந்த அரசு தான் தொடர்ந்து மத்திய அரசுக்கு எதிராக குரல் கொடுக்கின்ற அரசாக இருக்கிறது. உடன் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தி.மு.கழக வேட்பாளர்

# ஜே.ஜே.எபினேசர் 38வது வட்டத்தில் வாக்கு சேகரிப்பு!

## பகுதிச்செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் அறிவிப்பு !

சென்னை, ஏப்.04

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளர் ஜே.ஜே.எபினேசர் ஆதரித்து தேர்தல் பரப்புரை தொடங்கி வாக்கு சேகரிக்கிறார்.

இன்று (04.04.2026 சனிக்கிழமை) காலை 08.00 மணியளவில் 38வது வட்டம் அருள்மிகு முருகன் கோயில் ஆரம்பித்து வட்டம் முழுவதும் நடைபெறுகிறது.

வாக்கு சேகரிப்பில் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், பாக முகவர்கள், பாக இளைஞரணி முகவர்கள், பாக தகவல் தொழில்நுட்ப அணி முகவர்கள், பாக பணியாளர்கள், இளைஞரணி சகோதரர்கள், மகளிர் அணியினர், கழக முன்னோடிகள், சார்பு மன்ற நிர்வாகிகள் , கழகதினர் அனைவரும் கலந்து கொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபடுமாறு பகுதிச் செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் அறிக்கையில் கூறியுள்ளார்.



மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணியின் மயிலாப்பூர் சட்டமன்ற வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து 121 (அ) வட்டக்கழகத்தில் உள்ள பள்ளிவாசல்களில் சிறுபான்மையினர் அணியின் சார்பாக வாக்கு சேகரிப்பில் மயிலை மேற்கு பகுதி கழகச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., வட்டச் செயலாளர்கள் சி.கிருஷ்ணமூர்த்தி, டி.ராஜவேலு சிறுபான்மையினர் அணி மாவட்டத்தலைவர் ஷேக் முகமது, மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆ.உத்திரியம், வி.ஜான்சன், பகுதி அமைப்பாளர் எம்.முகமது சுலைமான், வட்ட நிர்வாகிகள் எஸ்.பலராமன், சா.லோகநாதன், எஸ்.சுந்தர், சதீஷ் குமார், லயன் கோவிந்தன், பிரேமானந்த், பகுதி துணை அமைப்பாளர்கள் பாபு செய்யத், மார்ட்டின், பீர் பாய், மொய்தீன், SDPI கட்சியைச் சார்ந்த மாவட்ட பகுதி வட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.